**செய்தி வெளியீடு எண்:1009** **நாள்:31.12.2020**

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>பதிவுத்துறை</u>

### <u>பொதுமக்களுக்கு தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009 பிரிவு 5(1)—ல் மேற்கொண்ட சட்ட திருத்தம் குறித்து தெரிவித்தல்</u>

தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009 பிரிவு 5(1)—ன் படி தமிழ்நாடு மாநிலத்தில், திருமணம் நடைபெறும் இடத்தின் எல்லைக்குட்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் மட்டுமே திருமணம் பதிவு செய்ய இயலும் என்ற நிலை இருந்தது. இதனை எளிமைப்படுத்தும் நோக்குடன் 2020—2021—ம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிவுத்துறை மானிய கோரிக்கையில், மணமகன் மற்றும் மணமகள் இருப்பிடம் அமைந்துள்ள சார்பதிவாளர் அலுவலகங்களிலும் திருமணத்தை பதிவு செய்யும் புதிய வசதியை ஏற்படுத்தும் விதமாக தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009—ல் திருத்தம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.

மேற்படி அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009 பிரிவு 5(1)—ல் கீழ்கண்ட சட்ட திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. சட்ட திருத்தம் பின்வருமாறு:—

தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009—ன் படி அனைத்து தரப்பினருக்கான திருமணங்களும் கட்டாய பதிவு செய்யப்பட வேண்டும் என்பதனை அனைவரும் பின்பற்றும் விதமாக திருமணம் நடைபெற்ற இடத்திலுள்ள சார்பதிவகம் மற்றும் மணமக்கள் இருவரின் நிரந்தர வசிப்பிடம் அமைந்துள்ள சார்பதிவகம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் திருமணப்பதிவினை மேற்கொள்ளலாம்.

எனவே, மேற்குறிப்பிட்ட வசதியை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**